## நிவேதா எம்.முருகன் தலைமை!

# மிசா பி.மதிவாணன் படம்; அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் திறந்து வைத்தார் !

### சு.கல்யாணசுந்தரம், என்.கௌதமன், துரை.சந்திரசேகரன், க.அன்பழகன், குத்தாலம் பி.கல்யாணம், எம்.பன்னீர்செல்வம் பங்கேற்பு!

நாகை, மே 23-

மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார்கோயில் ஒன்றியம் கழகச் செயலாளர் பி.எம்.அன்பழகன், தகவல் தொழில்நுட்ப அணி தஞ்சை மண்டல பொறுப்பாளர் பி.எம். ஸ்ரீதர் ஆகியோர் தந்தையும், செம்பனார்கோயில் ஒன்றியக்குழு தலைவர் நந்தினிஸ்ரீதர் மாமனாருமான செம்பனார்கோயில் மிசா.பி.மதிவாணன் கடந்த 4.5.2023 அன்று இயற்கை எய்தினார். மறைந்த மிசா பி.மதிவாணனுக்கு கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன் தலைமைக் கழகம் பெரியார் விருது வழங்கி கௌரவப்படுத்தியது. மிசா பி.மதிவாணன் மறைவுச் செய்தி அறிந்த கழக தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கல் தெரிவித்து செய்தி வெளியிட்டு இருந்தார்.

இதையடுத்து இவரது படதிறப்பு நிகழ்ச்சி செம்பனார்கோயில் பி.கே.சி. திருமண மண்டபத்தில் படதிறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம். முருகன் தலைமை தாங்குகிறார். சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம், மாவட்டக் கழக துணைச் செயலாளர் மு.ஞானவேலன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் முத்து.மகேந்திரன், ஜி.என்.ரவி, ஒன்றியக் கழகச் செயலாளர்கள் எம்.அப்துல்மாலிக், அமுர்தவிஜயகுமார் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். மிசா பி.மதிவாணன் படத்தை நிகழ்ச்சியில் சுற்றுச் சூழல் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் திறந்து வைத்தார். நிகழ்ச்சியில் மாவட்டக் கழகச் செயலாளர்கள் சு.கல்யாணசுந்தரம், என்.கௌதமன், துரை.சந்திரசேகரன், கா.அண்ணாதுரை, கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் குத்தாலம் பி.கல்யாணம், சட்டமன்ற உறுப்பினர்கள் சாக்கோட்டை க.அன்பழகன், கும்பகோணம் மாநகர துணை மேயர் சு.ப.தமிழழகன், காரைக்கால் மாநில அமைப்பாளர் ஏ.எம்.எச்.நாஜீம், கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் குத்தாலம் க.அன்பழகன், மாநில விவசாய அணி இணைச் செயலாளர் ஆர்.அருள்செல்வம், துணைத்தலைவர் எஸ்.கே.வேதரத்தினம், மாநில விவசாயத் தொழிலாளர் அணி துணை செயலாளர் ஜெக. வீரப்பாண்டியன்,

கழக இளைஞர் அணி துணைச் செயலாளர் நா.இளையராஜா, தகவல் தொழில் நுட்ப அணி துணைச் செயலாளர்கள் எஸ்.டி.இசை, விஜயகதிரவன், மாணவர் அணி துணைச் செயலாளர் மன்னை த. சோழராஜன், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்கள் கி.சத்தியசீலன், எம்.எம்.சித்திக், ஏ.சி. என். விஜயபாலன், எம். பன்னீர்செல்வம், து. மூர்த்தி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் இராம.இளங்கோவன், ப.கோவிந்தராசன், மாவட்டக் கழக நிர்வாகிகள் மயிலாடுதுறை கே. ஜி. சீனிவாசன், கண்ணகிபன்னீர், எஸ்.செல்வமணி, மகா.அலெக்சாண்டர், தலைமைக் கழக பேச்சாளர் ஆரூர்.மணிவண்ணன், மாவட்ட ஊராட்சிக் குழு தலைவர் உமாமகேஸ்வரிசங்கர், முன்னாள் ஒன்றியக்குழு உறுப்பினர் கோ.சி.மதி. திருமாவளவன் ஒன்றிய செயலாளர்கள் செல்ல சேதுரவிக்குமார், மலர்விழி திருமாவளவன், ஏ.ஜி.ஜெ.பிரபாகர், பஞ்சுகுமார், என்.இளைய பெருமாள், ஞான. இமையநாதன், முருகமணி, மூவலூர் எம். மூர்த்தி, மங்கை எம்.சங்கர், கு.வைத்தியநாதன், ஏ.ஆர்.ராஜா, மகா. குமார், முன்னாள் ஒன்றியச் செயலாளர் என். சசிக்குமார்,

நகரக் கழகச் செயலாளர்கள் குண்டாமணி (எ) என்.செல்வராஜ், ம.சுப்பராயன், பேரூர் கழகச் செயலாளர்கள் எஸ்.கே.முத்துராஜா, எம்.அன்புச்செழியன், எம்.சம்சுதீன், என்.அண்ணாதுரை, பொதுக்குழு உறுப்பினர்கள் ஜெ.கபிலன், நத்தம் ஏ.வின்சென்ட், எஸ்.வெற்றிவேல், அர்ஷத், எஸ். சுவாமிநாதன், பிசிவதாஸ், சுபாநெடுஞ்செழியன், பி.கென்னடி, எஸ். சிவசங்கரநாராயணன், அ.காந்தி, ஒன்றியக் குழு தலைவர்கள் கமலஜோதி தேவேந்திரன், காமாட்சிமூர்த்தி, வி.ஜெயபிரகாஷ், கே.மகேந்திரன், சீர்காழி நகர்மன்ற தலைவர் துர்காபரமேஸ்வரி ராஜசேகர், பேரூராட்சி தலைவர்கள் சுகுணாசங்கர் குமரவேல், பூங்கொடி அலெக்சாண்டர், கண்மணி அறிவழகன், சங்கீதாமாரியப்பன், மாவட்ட ஊராட்சி உறுப்பினர் வெண்ணிலாதென்னரசன், துளசிரேகா ரமேஷ், ராபியா நர்கிஸ்பானி மாவட்ட, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிகள் உள்ளிட்ட ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர்.

## தி.மு.க. சட்டத்துறைச் சார்பில்

# மாவட்ட - மாநகர நீதிமன்ற, தலைவர் - துணைத் தலைவர் மற்றும் அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் தேர்வுக்கான நேர்காணல்!

### தி.மு.க. சட்டத்துறைச் செயலாளர் - மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ, எம்.பி., அறிக்கை

கழகத் தலைவர் அவர்களின் அறிவுரைக்கிணங்க, தி.மு.க. சட்டத்துறை மாவட்ட மாநகர -நீதிமன்ற, தலைவர் - துணைத் தலைவர் மற்றும் அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் தேர்வு செய்திட பின்வரும் தேதியில் குறிப்பிட்டுள்ள மாவட்டங்களுக்கான நேர்காணல் நடைபெறும்.

**நேர்காணல் நடைபெறும் நாள்: 24.5.2023 (புதன்கிழமை)**
**இடம் : "அன்பகம்", சென்னை 18**

**நேரம் மாவட்டங்கள்**

காலை 9.00 மணி - தருமபுரி கிழக்கு, தருமபுரி மேற்கு, கிருஷ்ணகிரி கிழக்கு, கிருஷ்ணகிரி மேற்கு, விழுப்புரம் வடக்கு, விழுப்புரம்தெற்கு, கள்ளக்குறிச்சி வடக்கு, கள்ளக்குறிச்சி தெற்கு, கடலூர் கிழக்கு, கடலூர் மேற்கு

மாலை 4.00 மணி - தஞ்சை வடக்கு, தஞ்சை தெற்கு, தஞ்சை மத்திய, நாகை மயிலாடுதுறை, திருவாரூர், திருவள்ளூர் கிழக்கு, திருவள்ளூர் மேற்கு, திருவள்ளூர் மத்திய, காஞ்சிபுரம் வடக்கு, காஞ்சிபுரம் தெற்கு

**நேர்காணல் நடைபெறும் நாள் : 25.5.2023 (வியாழக்கிழமை)**
**இடம் : "அன்பகம்", சென்னை 18**

காலை 9.00 மணி - அரியலூர், பெரம்பலூர், திருச்சி வடக்கு, திருச்சி மத்திய, திருச்சி தெற்கு, புதுக்கோட்டை வடக்கு, புதுக்கோட்டை தெற்கு, கரூர்.

மாலை 4.00 மணி - இராமநாதபுரம், சிவகங்கை, விருதுநகர் வடக்கு, விருதுநகர் தெற்கு, மதுரை வடக்கு, மதுரை தெற்கு, மதுரை மாநகர், திண்டுக்கல் கிழக்கு, திண்டுக்கல் மேற்கு, தேனி வடக்கு, தேனி தெற்கு

**நேர்காணல் நடைபெறும் நாள் : 26.5.2023 (வெள்ளிக்கிழமை)**
**இடம் : "அன்பகம்", சென்னை 18**

காலை 9.00 மணி - கன்னியாகுமரி கிழக்கு, கன்னியாகுமரி மேற்கு, தூத்துக்குடி வடக்கு, தூத்துக்குடி தெற்கு, திருநெல்வேலி கிழக்கு, திருநெல்வேலி மத்திய, தென்காசி வடக்கு, தென்காசி தெற்கு.

மாலை 4.00 மணி - சேலம் கிழக்கு, சேலம் மேற்கு, சேலம் மத்திய, நாமக்கல் கிழக்கு, நாமக்கல் மேற்கு, ஈரோடு வடக்கு, ஈரோடு தெற்கு, கோவை வடக்கு, கோவை தெற்கு, கோவை மாநகர், நீலகிரி, திருப்பூர் வடக்கு, திருப்பூர் தெற்கு

இதில், ஏற்கனவே தி.மு.க. சட்டத்துறை சார்பில் வெளியிடப்பட்ட விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்து, தலைமைக் கழகத்திலோ அல்லது மாவட்டக் கழக அலுவலகத்திலோ சமர்ப்பித்தவர்கள் மட்டுமே இந்நேர்காணலில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவார்கள்.

அத்துடன், நேர்காணலுக்கு வருபவர்கள், தாங்கள் விண்ணப்பித்த விண்ணப்பப் படிவ நகலை கொண்டுவர வேண்டும்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 21.5.2023

**என்,ஆர்.இளங்கோ எம்.பி.,**
செயலாளர்
தி.மு.க. சட்டத்துறை



நேற்று முன்தினம் (21.5.23)காஞ்சிபுரம் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் ஆலயம் தங்கும் விடுதி மற்றும் உணவகத்தை சுற்றுலாத்துறை அமைச்சர் கா. ராமச்சந்திரன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் சுற்றுலா இயக்குநர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் சந்தீப் நந்தூரி. மாவட்ட வருவாய் அலுவலர் சிவ ருத்ரய்யா ஆகியோர் உள்ளனர்.



சேலம் மாவட்டம் முன்னாள் மேற்குமாவட்ட கழக செயலாளரும் மறைந்த முன்னாள் சேலம் மாவட்ட கழக செயலாளருமான வீரபாண்டி ஆறுமுகத்தின் மகனுமான வீரபாண்டி ஆ. செழியனின் 22வது ஆண்டு நினைவு தினத்தையொட்டி பூலாவரியில் உள்ள அவரது நினைவிடத்தில் நகர்ப்புற வளர்ச்சி துறை அமைச்சர் கே.என். நேரு, வேளாண்மை துறை அமைச்சர் எம். ஆர்.கே.பன்னீர் செல்வம், மாவட்ட கழக செயலாளர்கள். இரா இராஜேந்திரன் எம்.எல்.ஏ. சேலம் மத்திய மாவட்டம் எஸ். ஆர். சிவலிங்கம் சேலம் கிழக்கு மாவட்டம், டி.எம். செல்வகணபதி சேலம் மேற்கு மாவட்டம் தி.மு.க தகவல் தொழில் நுட்ப அணி மாநில துணச் செயலாளர். டாக்டர். ஏ.கே. தரூண், என். பிருந்தா செழியன். டாக்டர். என்.சூர்யா, டாக்டர் என்.சிந்து, டாக்டர்.ராம்குமார். தலைமை தி.மு.க. பொதுக்குழு உறுப்பினர் மலர்விழி ராஜா ஆகியோர் மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார்கள்.

## கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி முன்னிலையில்

# மானியத்துடன் வீடு கட்ட நகர்ப்புற கைத்தறி நெசவாளர்களுக்கு பணி ஆணைகள்!

### வனத்துறை அமைச்சர் டாக்டர் மா.மதிவேந்தன் வழங்கினார்!

நாமக்கல், மே 23-

தமிழ்நாடு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் அவர்களின் 2021 - 2022 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையில் ஆண்டுக்கு ரூ. 21 கோடி கூடுதல் செலவினத்தில் கைத்தறி நெசவாளர்களுக்கு வீடுகள் கட்ட மானியமாக வழங்கப்படும் தொகை ரூ. 4 லட்சமாக உயர்த்தி அதனை நகர்ப்புற நெசவாளர்களுக்கும் விரிவுபடுத்தப்படும் என்ற அறிவிப்பினை அறிவித்திருந்தார்.

மேற்படி அறிவிப்பினை செயல்படுத்தும் பொருட்டு கைத்தறி துறையின் கட்டுபாட்டில் இயங்கி வரும் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் கண்டறியப்பட்ட கிராமப்புறத்தினை சார்ந்த 70 கைத்தறி நெசவாளர்கள் மற்றும் நகர்ப்புறத்தினை சார்ந்த 511 கைத்தறி நெசவாளர்களுக்கு ரூ. 4 லட்சத்தில் மானியத்துடன் வீடு கட்டும் திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதில் நாமக்கல் மாவட்டத்தில் நகர்ப்புற கைத்தறி நெசவாளர்கள் மானியத்துடன் கூடிய வீடு கட்டும் திட்டத்திற்கு தகுதியான 13 பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். மேற்படி 3 பயனாளிகளுக்கான பணி ஆணைகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் முன்னிலை வகித்தார்.

நிகழ்வில் வனத்துறை அமைச்சர் டாக்டர் மா.மதிவேந்தன் கலந்துகொண்டு தேர்வு செய்யப்பட்ட 13 பயனாளிகளுக்கு பணி ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்வில் வெண்ணந்தூர் ஒன்றிய செயலாளர் ஆர்.எம்.துரைசாமி, வெண்ணந்தூர் பேரூராட்சி தலைவரும், பேரூர் கழக செயலாளருமான ஆர்.எஸ்.எஸ். இராஜேஸ்குமார், திருச்செங்கோடு சரக உதவி இயக்குனர் வ.செந்தில்குமார், துறை அலுவலர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

## தஞ்சையில் மது அருந்திய இருவர் மரணம்

# விஷமருந்தி தற்கொலை செய்து கொண்டனரா? தீவிர விசாரணை!

### மாவட்ட ஆட்சியர் தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் பேட்டி!

தஞ்சாவூர், மே 23-

தஞ்சாவூரில் மது அருந்திய இருவர் மரணம் அடைந்ததில், அவர்கள் அருந்திய மதுவில் சயனைடு விஷம் கலந்திருந்ததாக மாவட்ட ஆட்சியர் தகவல். தஞ்சாவூர் கீழவாசலில் அனுமதி பெற்ற டாஸ்மாக் பார் செயல்பட்டு வருகிறது.

இதில் மது அருந்திய மீன் வியாபாரியான குப்புசாமி (68), பூமான்ராவத்தன் கோயில் தெருவைச் சேர்ந்த கார் ஓட்டுநர் குட்டி விவேக் (36) ஆகியோர் உயிரிழந்தனர்.

இந்நிலையில், இது தொடர்பாக தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் செய்தியாளர்களிடம் கூறியது.

"தஞ்சாவூரில் மது அருந்தி குப்புசாமி, விவேக் உயிரிழந்த சம்பவம் தொடர்பாக காவல்துறையினர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தனர். இருவரது உடல்களிலும் இருந்த சில பகுதிகள் எடுக்கப்பட்டு, தஞ்சாவூர் மண்டல தடய அறிவியல் ஆய்வகத்துக்கு அனுப்பப்பட்டன. இந்த ஆய்வறிக்கையில் அவருகள் அருந்திய மதுவில் மெத்தனால் ஆல்கஹால் இல்லை என்பதும், சயனைடு விஷம் இருந்ததும் தெரியவந்தது.

மேலும் இந்த சம்பவம் தொடர்பாக பார் உரிமையாளர், பார் ஊழியர் கைது செய்யப்பட்டுள்ளனர். பார் உரிமையாளர் செந்தில் பழனிவேல், பார் ஊழியர் காமராஜ் ஆகியோரை தஞ்சை நகர காவல்துறையினர் கைது செய்தனர்.

உயிரிழந்த விவேக் குடும்ப பிரச்னை காரணமாக அவர் மனைவியை விட்டு பிரிந்து தனியாக வாழ்ந்து வந்தார். என்பது விசாரணையில் தெரியவந்துள்ளது. இது தொடர்பாக விரிவான விசாரனை நடைபெற்று வருகிறது. இருவரும் விஷமருந்தி தற்கொலை செய்து கொண்டாரா? அல்லது கொலை செய்யப்பட்டாரா? என்பது குறித்து மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தனிப்படை அமைத்து விசாரணை நடத்தி வருகிறார். இந்த விசாரணையின் முடிவில் முழு விவரமும் தெரியவரும். மேலும் இருவரின் பிரேத பரிசோதனை முடிவு வந்தவுடன் மேலும் சில தகவல்கள் கிடைக்களால், இந்தச் சம்பவத்தில் தொடர்புடையவர்கள் மீது கண்டிப்பாக கடும் நடவடிக்கை எடுக்கப்படும்" என்றார்.

அப்போது மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் ஆஷிஷ் ராவத் உடனிருந்தார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### எஸ்.ஆர். முகிலன்
### மே 23 (1999)



**1954இல் கழக உறுப்பினராகி பின்னர், கோமல் கிளைக் கழகச் செயலாளர் – மயிலாடுதுறை வட்டக் கழக துணைச் செயலாளர் – வட்டக் கழகப் பொறுப்புச் செயலாளர் என பல்வேறு பொறுப்புகள் வகித்து கழகப் பணியாற்றியவர்.**

**மயிலாடுதுறை பகுதியில் கழகம் வளர உழைத்தவர்களில் இவரும் ஒருவர்.**

**1962இல் விலைவாசி உயர்வு எதிர்ப்புப் போராட்டம் – 1965இல் இந்தி எதிர்ப்புப் போராட்டம் – மிசா கைதியாக ஒரு மாத சிறைவாசம்; மேலும் கழகம் அறிவித்த பல்வேறு அறப்போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**